## அரசமைப்புச் சட்டத்துக்கு மெருகூட்டுகிற பல தீர்ப்புகளை நீதியரசர்கள் வழங்குகிறார்கள்! ஆனாலும் அண்மைக்காலமாக

# கூட்டாட்சித் தத்துவம் பாதிக்கப்படுகிற நிலை காணப்படுகிறது!

## சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.3.2025) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட 75வது ஆண்டு விழா மற்றும் சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் 160வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். இவ்விழாவில், உச்சநீதிமன்ற நீதிபதிகள் நீதியரசர் எம்.எம். சுந்தரேஷ், நீதியரசர் கே.வி. விஸ்வநாதன், ஆர். மகாதேவன், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் கே.ஆர். ஸ்ரீராம், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஆர்.இளங்கோ, பி. வில்சன், ஆர். கிரிராஜன், இந்திய கூடுதல் சொலிசிடர் ஜென்ரல் ஏஆர்எல். சுந்தரேசன், இந்திய முன்னாள் அட்டர்னி ஜென்ரல் கே.பராசரன், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் எம்.பாஸ்கர், செயலாளர் எஸ். திருவேங்கடம், நீதியரசர்கள், மூத்த வழக்கறிஞர் ராஜய்யா உள்ளிட்ட வழக்கறிஞர்கள், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சென்னை, மார்ச் 17 –**

**அரசமைப்புச் சட்டத்திற்கு மெருகூட்டுகிற பல தீர்ப்புகளை நீதியரசர்கள் வழங்குகிறார்கள் எனவும், அண்மைக் காலங்களில் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்புகளில் ஒன்றான கூட்டாட்சித் தத்துவம் பாதிக்கப்படும் நிலை காணப்படுகிறது எனவும், சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில் உரை யாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.03.2025) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட 75வது ஆண்டு விழா மற்றும் சென்னை வழக்கறிஞர் கள் சங்கத்தின் 160வது ஆண்டு விழாவில் ஆற் றிய உரை வருமாறு:-

முதலில் ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். நீதியரசர் சுந்தரேஷ் அவர்கள் இங்கு உரையாற்றிய போது ஒரு இக்கட்டான நிலையில் நின்று கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். ஒரு நீதியரசர் தமிழில் பேசுவார் என்று நினைத்தோம்; ஆங்கிலத்தில் பேசினார். ஒரு நீதியரசர் ஆங்கிலத்தில் பேசுவார் என்று நினைத்தோம்; ஆனால், தமிழில் பேசினார். இதுதான் இரு மொழிக் கொள்கை. இது தமிழ் நாடு. இக்கட்டான நிலை எல்லாம் கிடையாது. நல்ல நிலைதான் இது.

### தமிழ்நாட்டிலிருந்து சென்று நீதித்துறைக்கு பெருமை சேர்ப்போர்!

நேற்று நிதிநிலை அறிக்கையை நாங்கள் தாக்கல் செய்தோம். நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துவிட்டு, இன்றைக்கு நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறோம்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ஸ்ரீராம் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அவருடன் நான் கலந்து கொள்ளும் முதல் நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. அதனால், நான் பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் இருந்து சென்று இந்திய அள வில் நீதித்துறைக்கு பலவிதங்களில் பெருமை சேர்த்து கொண்டிருக்கக்கூடிய

உச்சநீதிமன்ற நீதியரசர் ஆர். மகாதேவன் அவர்களுக்கும் – உச்சநீதிமன்ற நீதியரசர் கே.வி. விஸ்வநாதன் அவர்களுக்கும் , உச்சநீ திமன்ற நீதியரசர் எம்.எம்.சுந்தரேஷ் அவர்க ளுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக ளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மெட்ராஸ் பார் அசோசியேஷனின் போற்றத் தக்க 160ஆம் ஆண்டு பயணத்தைக் குறிக்கும் கொண்டாட்டத்தில் உங்களுடன் நானும் பங் கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்; பெரு மைப்படுகிறேன். வாய்ப்பினை தந்த அனைவ ருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்கிறேன்.

### தலைசிறந்த பாரம்பரியம் கொண்ட சென்னை உயர்நீதிமன்றம்!

இந்தியாவிலேயே தலைசிறந்த பாரம்பரியம் கொண்டது நம்முடைய சென்னை உயர்நீதி மன்றம்! நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மூத்த வழக்கறிஞர் அதை விளக்கியிருக்கிறார். எனவே, அதுகுறித்து நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

1862ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த நீதிமன்றத்தின் பார் அசோசியேஷன், 1865 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, அந்த ஆண்டு மார்ச் 14ஆம் நாள் முதல் கூட்டம் நடந்தது. இன் றைக்கு அதனுடைய 160ஆம் ஆண்டை கொண்டாடக்கூடிய வகையில் இதை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதிலும், முற்போக்கான சமூக வளர்ச்சியை நோக்கி நடைபோடுவதிலும் வழக்கறிஞர்களின் பங்கு மிக முக்கியமானதாகும்!

வழக்கறிஞர்கள்தான், சமூகத்தில் நிலவுகி ன்ற அநீதி என்ற நோயைக் குணப்படுத்து கின்ற மருத்துவர்கள்! அதுமட்டுமல்ல, வழக்கறிஞர் கள் சங்கம் என்பது, சமூகநீதியைக் காப்பதிலே யும், தனிநபர்களுடைய அடிப்படை உரிமைக ளைப் பாதுகாப்பதிலேயும் முதன்மை அமைப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

### ஜனநாயகத்தை செதுக்குவதில் நீதியரசர்கள் – வழக்கறிஞர்கள் பங்கு!

‘சட்டம் ஒரு இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு’ என்று பேரறிஞர் அண்ணா சொன்னார்.

ஜனநாயகத்தை செதுக்குவதில், வழக்கறி ஞர்கள் மற்றும் நீதியரசர்களுடைய பங்க ளிப்பை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் உருவான வழக்கறிஞர்கள், இந்தியாவின் பிற உயர் நீதி மன்றங்களிலும் தங்களுடைய அறிவாற்ற லால், வாதத்திறமையால் புகழடைந்திருக் கிறார்கள். அரசமைப்புச் சட்டத்துக்கு மெருகூட் டுகின்ற பல தீர்ப்புகளை, நம்முடைய நீதியரசர்கள் வழங்கியிருக்கார்கள். இன் றைக்கு வரைக்கும், அரசியல் சாசனத்தை பாது காப்பதில், நம்முடைய சென்னை உயர்நீதிமன் றமும் மெட்ராஸ் பார் அசோசியேஷனும் மிகச் சிறப்பான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக் கிறீர்கள்!

மெட்ராஸ் பார் அசோசியேசனின் 160ஆவது ஆண்டு விழாவினை சேர்த்து, இந்திய அரச மைப்புச் சட்டத்தின் 75ஆவது விழாவையும் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்! அதற்காக என்னு டைய வாழ்த்துகள்!

“அரசமைப்பு என்பது, சமூக நீதி மற்றும் சமத் துவத்தை அடைவதற்கான ஒரு கருவி” என் றும், “அரசமைப்பு என்பது சுதந்திரம், சமத்து வம் மற்றும் சகோதரத்துவத்தை வாழ்க்கை யின் கொள்கையாக அங்கீகரிக்கும் ஒரு முறை” என்றும் மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்.

அரசமைப்பு ரீதியாக, இந்தியா ஒரு ஜனநா யக சோசலிச மதச்சார்பற்ற இறையாண்மை பொருந்திய குடியரசு!

### உத்தரவாதம் அளிக்கும் இந்திய அரசமைப்புச் சட்டம்!

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை யில் குறிப்பிடப்பட்டிருக்கும் நீதி, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு இது உத்தரவாதம் அளிக்கிறது.

அரசமைப்புச் சட்டமானது அரசாங்க கட்ட மைப்பு, நடைமுறைகள் மற்றும் அதிகாரங்க ளுக்கான வழிகாட்டுதல்களை நிறுவுவதோடு, அடிப்படை உரிமைகள், மையக் கொள்கைகள் மற்றும் தங்கள் நாட்டிற்கான குடிமக்களின் கட மைகளையும் வரையறுக்கிறது.

## நீதித்துறைக்குத் தேவையான வசதிகளை திராவிட மாடல் அரசு நிறைவேற்றித் தருகிறது!

இந்தியாவில் வெவ்வேறு மதம், இனம் மற் றும் பண்பாட்டு நடைமுறைகள் இருந்தாலும், நம்முடைய அரசமைப்புச் சட்டம், அதன் மாற் றும் அணுகுமுறையின் காரணமாக உயிர்ப்பு டன் இருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தின் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும் எதிராக உறுதியான தூண்க ளாக நிற்கும் சுதந்திரமான நீதித்துறை, சிறந்த நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களுடைய பங் களிப்பு ஆகியவை அரசமைப்பின் உயிர்ப்பான நிலைத் தன்மைக்குக் காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

### அண்மைக் காலமாக கூட்டாட்சித் தத்துவம் பாதிக்கப்படும் நிலை!

அண்மைக் காலங்களில், அரசமைப்புச் சட் டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளில் ஒன் றான கூட்டாட்சித் தத்துவம் பாதிக்கப்படுகின்ற நிலை காணப்படுகிறது.

நிதி, கல்வி போன்ற பல விஷயங்களில், மாநில அரசுகளின் சுயசார்புத் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும் என்று கருதுகிறேன்.

அரசமைப்புச் சட்டத்தின் ஆளுமையை உறுதி செய்வதில், மாநிலங்களுடைய உரிமை களைப் பாதுகாப்பதில் நீதித்துறை தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது.

கற்றறிந்த நீதியரசர்களும், வழக்கறிஞர்க ளும், இந்த அவையும் அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாவலர்களாக செயல்படுகிறார்கள்.

நம்முடைய அரசு, அரசியல் சாசனத்தின் வார்த்தைகளை முழுமையாக நடைமுறைப்ப டுத்த, கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கி றது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

### நீதித்துறைக்கு இந்த அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள்!

இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல், நீதித் துறைக்கும், வழக்குரைஞர்களின் நலனுக்கும், சட்டக்கல்விக்கும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் சிலவற்றை மட் டும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு வழக்கறிஞர் நல நிதியத்திற்கு ஆண்டுதோறும் அரசு வழங்கும் 8 கோடி ரூபாய் மானியத்தை 10 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கி இருக்கிறோம்.

> **அரசமைப்புச் சட்டத்தின் மீதான எந்தவொரு தாக்குதலுக் கும் எதிராக உறுதியான தூண்களாக நிற்கும் சுதந்திரமான நீதித்துறை, சிறந்த நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களு டைய பங்களிப்பு ஆகியவை அரசமைப்பின் உயிர்ப்பான நிலைத்தன்மைக்குக்காரணம்என்பதைநான்இந்தநேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.**

இயற்கை எய்திய வழக்குரைஞர்களின் சட் டபூர்வ வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை 7 லட்சம் ரூபாயி லிருந்து 10 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங் கப்பட்டது.

உயிரிழந்த வழக்குரைஞர்களின் வாரிசுதா ர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதியுதவிக்கான விண்ணப்பங்கள் அப்போது அதிகமாக நிலுவையில் இருந்ததை கருத்தில் கொண்டு, கூடுதல் மானியமாக

20 கோடி ரூபாய் வழக்குரைஞர்கள் நல நிதி யத்துக்கு வழங்க ஆணையிடப்பட்டது. கூடுத லாக 2 கோடி ரூபாய் நிதி வழங்கியிருக்கி றோம்.

### நீதித்துறைக்கு உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தரும் அரசு!

நீதித்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிக ளைப் பொறுத்தவரைக்கும், நம்முடைய அரசு பொறுப்பேற்றதில் இருந்து,

6 மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்;

## சமூக நீதியைப் பாதுகாக்கும் வழக்கறிஞர்கள் சங்கம்!

5 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்;

13 சார்பு நீதிமன்றங்கள்;

2 கூடுதல் சார்பு நீதிமன்றங்கள்;

7 முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்;

18 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவி யல் நடுவர் நீதிமன்றங்கள்;

3 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்;

1 குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்;

7 வணிக நீதிமன்றங்கள்;

9 சிறப்பு நீதிமன்றங்கள்;

2 குடும்பநல நீதிமன்றங்கள் உள்ளிட்ட 73 புதிய நீதிமன்றங்கள்; 1689 புதிய பணியிடங் கள் மற்றும் இதர வசதிகளுடன் 151 கோடியே 68 இலட்சத்து 47 ஆயிரத்து 995 ரூபாய் செல வில் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டி ருக்கிறது.

புதிதாக நீதிமன்ற கட்டடங்கள் கட்டுதல், நீதி பதிகளுக்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டுதல், பழைய நீதிமன்ற கட்டடங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணி களுக்கு அரசு 851 கோடியே 43 இலட்சம் ரூபாய் வழங்கி இருக்கிறது.

### மாவட்ட கீழமை நீதிமன்றங்களுக்கு அரசு நிறைவேற்றித் தரும் வசதிகள்!

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளை ஆகிய நீதிமன்றங்களுக்கு கணினி தொடர்பான கட்டமைப்புகளை உருவாக்க

37 கோடியே 94 இலட்சம் ரூபாய் அரசு வழங்கியிருக்கிறது.

மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங் களுக்கு, கணினி தொடர்பான கட்டமைப்பு களை உருவாக்க 66 கோடியே 66 இலட்சம் ரூபாய் அரசு வழங்கியிருக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளைக்கு பல்வேறு நிலையிலான 20 கூடுதல் பணியிடங்களை உருவாக்கி ஆணை கள் வெளியிடப்பட்டிருக்கிறது.

மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்க ளுக்கு, பல்வேறு நிலையிலான 244 கூடுதல் பணியிடங்களை உருவாக்கி ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில், சட் டக் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரிக்கு விடுதிகளுடன் கூடிய கட்டடம் கட் டுவதற்கு 100 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கு, விடுதிக ளுடன் கூடிய கட்டடம் கட்டுவதற்கு 102 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு, புதிய கட்ட டம் கட்டும் பணிகளுக்கு ஏற்கெனவே ஒப்பளிக் கப்பட்ட 40 கோடியே 8 இலட்சம் ரூபாயுடன் கூடுதலாக 4 கோடியே 61 இலட்சம் ரூபாய் வழங்கி கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### அரசு சட்டக் கல்லூரிகளுக்கு தேவையான திட்டங்கள்!

6 அரசு சட்டக் கல்லூரிகளுக்கு, 480 மாண வர்களை கூடுதலாக அனுமதித்து, ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணை யம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 12 நபர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் விளையாட்டு மற் றும் உடற்கல்வி இயக்குநர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நிய மன முறையில் தெரிவு செய்யப்பட்ட 12 உதவிப் பேராசிரியர்கள், அரசு சட்டக் கல்லூரிகளில் தற் காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு பணி புரிந்து வருகிறார்கள்.

அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரிந்து வரும் 36 உதவிப் பேராசிரியர்களுக்கும், அதில் 5 உதவிப் பேராசிரியர்களுக்கும் இணைப் பேராசிரியர் நிலைக்கு பணி மேம் பாடு வழங்கப்பட்டிருக்கிறது.

அரசு சட்டக்கல்லூரிகளில், காலியாக இருக் கின்ற 2 பழங்குடியினர் பிரிவினருக் கான பின் னடைவு காலி பணியிடங்கள், 8 இணைப் பேராசிரியர்கள், 64 சட்ட உதவிப் பேராசிரியர் கள் மற்றும் 60 சட்ட முன்படிப்பு உதவிப் பேரா சிரியர்கள் என்று மொத்தம் 132 காலி பணியி டங்கள நிரப்ப ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 24.01.2025 அன்று அறிவிக்கை வெளியிடப் பட்டு நிரப்பப்படவுள்ளது.

இதுபோன்ற திட்டங்கள் தொடர்ந்து செயல்ப டுத்தித் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கி றோம்.

### உச்சநீதிமன்ற கிளையை சென்னையில் அமைத்திடுக!

நீதித்துறை உட்கட்டமைப்புக்குத் தேவை யான அனைத்து வசதிகளை மேம்படுத்தித் தர தமிழ்நாடு அரசு என்றைக்கும் துணை நிற்கும்.

உச்சநீதிமன்றத்தின் நீதியரசர்கள் வருகைபு ரிந்துள்ள இந்த நேரத்தில், சென்றமுறை இதே இடத்தில் நான் வைத்த ஒரு முக்கியமான கோரிக்கையை மீண்டும் ஒருமுறை இங்கே நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உச்சநீதிமன்றத்தின் கிளையை சென்னை யில் அமைத்தால், தென்மாநில மக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் மிகுந்த பயனுடைய தாக இருக்கும் என்பதை மீண்டும் இந்த நேரத் தில் நான் நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முன்னோ டியான அண்ணல் டாக்டர் அம்பேத்கரின் கூற்றை மேற்கோள் காட்டி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

### இந்த மண்ணின் ஆன்மாவாக விளங்கும் அரசமைப்புச் சட்டம்!

“அரசமைப்புச் சட்டம் என்பது வழக்கறிஞர் களின் கையில் இருக்கும் ஒரு ஆவணம்தானே எனக் கருதக்கூடாது; அது நமது வாழ்க்கைப் பயணத்தில், நமது வாழ்வின் தரத்தையே மேல்நிலைக்கு கொண்டு செல்லும் ஒரு வாகன மாகும்; அது எப்போதுமே இந்த மண்ணின் ஆன்மாவாக விளங்குகிறது” என்று அண்ணல் அம்பேத்கர் சொன்னார்!

அதுபோல வழக்கறிஞர்கள் செயல்பட வேண்டும்; செயல்பட வேண்டும் என்று கேட்டு, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த் துகளைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.